அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, இன்னொரு செய்தி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்வோடு இருக்க வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதிகளில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன, அவற்றிலே நவீனமான புதிய தொழிற்பயிற்சிப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

214—

அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர்

***57391—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, மேலகுப்பம் ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி, ஆலங்காயம் வட்டாரம், மேலகுப்பம் ஊராட்சியிலுள்ள மேலகுப்பம்-2 அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட ஆலங்காயம் ஒன்றியம், மேலகுப்பம் ஊராட்சியிலே குண்டன்வட்டம் என்று சொல்லப்படுகின்ற பகுதியிலே என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் அங்கன்வாடி மையம் கட்டப்பட்டது. அந்த அங்கன்வாடியின்மூலம் 30 பிள்ளைகள் பயன்பெறுகின்றார்கள். அந்த அங்கன்வாடி இருக்கின்ற பகுதி விவசாய நிலத்தை ஒட்டியுள்ள பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், சிறு குழந்தைகள் அங்கே இருக்கின்ற காரணத்தினால், அந்தக் குழந்தைகளுடைய பாதுகாப்பைக் கருதி, உடனடியாக அந்த அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும் என்று தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அங்கன்வாடி மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கென்று தனியாக நிதி எதுவும் ஒதுக்கப்படுவதில்லை. அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு மட்டும் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பல பகுதிகளிலே சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெறப்படுகின்ற நிதியின்மூலம் சுற்றுச்சுவர் கட்டப்படுகின்றது. சமுதாய ஒத்துழைப்போடும் சுற்றுச்சுவர் கட்டப்படுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் கருத்துரு அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2015 செப்டம்பர் 3

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுவதற்காக தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்கின்றோம். ஒரு பகுதியிலே 5 இலட்சம் ரூபாயில் கட்டடம் கட்டி விடுகின்றார்கள். இன்னொரு பகுதியிலே 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயைக் கொடுத்தால்தான் கட்டடம் கட்ட முடியும் என்று நிதியையே திருப்பி அனுப்பி, மீண்டும் 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயைக் கொடுத்தால் மட்டுமே பணியை எடுக்கின்றார்கள். இப்படி கிராமப் பகுதிகளிலேயே ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒவ்வொரு விதமான தொகையை, மதிப்பீட்டை நிர்ணயம் செய்கின்றார்கள். ஆகவே, 2012-2013, 2013-2014 ஆம் ஆண்டுகளிலே 20 இலட்சம் ரூபாயிலே, 4 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டியது போக, இந்த வருடம் 2015-2016 ஆம் ஆண்டில், ஒரு அங்கன்வாடிக்கு 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வீதம் ஒதுக்கீடு செய்தால், 3 அங்கன்வாடி மையங்களைத்தான் கட்ட முடிகின்றது. ஆகவே, ஒதுக்கீடு செய்யப்படுகின்ற அந்த நிதியை முறைப்படுத்தி, எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான நிதியில் கட்டப்படுகின்ற ஒரு சூழலை உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது புதிய செய்தியாகத் தெரிகிறது. ஊரக வளர்ச்சித் துறையிடம் இந்த அளவிலே, இந்த நிதியிலேயே கட்ட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு, அந்த நிதிக்குள்ளாகத்தான் தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான விதிமுறைகளுக்குட்பட்டு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற செய்தி சரியாக இருக்காது என்று நான் நினைக்கின்றேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன காரணத்தினால், அதுகுறித்து மாவட்ட ஆட்சித்*

2015 செப்டம்பர் 3]

தலைவர், உள்ளாட்சித் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சரியான முறையிலே வழிமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

215—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

*__43688__ **திரு. சுப. தங்கவேலன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனை வட்டம், ஆர்.எஸ். மங்கலத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை சட்டமன்றத் தொகுதி, திருவாடனை, ஆர்.எஸ். மங்கலத்தில் புதிதாக அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குகிற கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள பேரணாம்பட்டு வட்டத்தில், ஒரு பெண்கள்